DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

STC.No. 1784 /2019

Deposition of Witness : LW 6/PW7

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.செல்வகுமார் | Taluk | |
| Father's Name | திரு.செல்வராசு | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 30.11.2023 | | | |

(Accused Present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.L. சந்திரசேகர்(Gr.I 379) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை-**

நான் தற்போது பி.ஆண்டிகுப்பத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி -7 அமர்தலிங்கம் என்பவரை தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் என் கையொப்பம் முதலாவதாக உள்ளது. இரண்டாவதாக உள்ள கையொப்பம் யாருடையது என்று தெரியாது. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு மாலை வேளையில் என் வீட்டின்அருகே நான் இருந்த போது காடாம்புலியூர் காவல் நிலைய போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்கண்ட கையெழுத்து போட்டேன். (**மேற்படி முதலாவதாக உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2/ அசா7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எனக்கு இவ்வழக்கு சம்மந்தமாகவும் பார்வை மகசர் ஆவணம் சம்மந்தமாகவும் எந்த விவரமும்தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆஜர் எதிரியை தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையின்போது 04.11.2014 அன்று பகல் 12.00 மணியளவில் என் முன்பும், அமர்தலிங்கம் முன்பும் காடாம்புலியூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் இவ்வழக்கு சம்பவ இடத்தை பாரவையிட போவதாகவும் அதற்கு எங்களை சாட்சிகளாக

இருக்கசொல்லி கேட்டுக்கொண்டதன் பேரில் எங்கள் இருவர் முன்னிலையிலும்சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பங்கள் செய்துள்ளோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது எனக்கு மட்டும் தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை.**